ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2211/69 - 2021 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2021.01.22

*2211/69 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (x)(*அ*)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக அங்கீகரிக்கப்படுகின்ற* PV *72548 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதும் சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2019, செத்தெம்பர் 20 ஆந் திகதிய 2141/ 81 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதன் நிரல்* I *இலும் மற்றும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "வியாபார நிர்வாக இளமாணி" என்னும் பதிவினை உடனடுத்து இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்* I *மற்றும் நிரல்* II *இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களுக்காக மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமானவை ; அல்லது :

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S')

2. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீட்டுப் பெயர் |
|---|---|
| மனிதவள முகாமைத்துவத்தில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி கௌரவ (மனிதவள முகாமைத்துவம்) |
| வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | பிபிஎம்ஜிரி கௌரவ |
| கணக்கியல் மற்றும் நிதியியலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி கௌரவ (கணக்கியல் மற்றும் நிதியியல்) |
| சந்தைப்படுத்தலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி கௌரவ (சந்தைப்படுத்தல்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2021, சனவரி 11.*

*02-55*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.